III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
O.S.02/2012

Deposition of witness for the Defendant/DW1
solemnly by Tmt.R.Santhi, Translator
in accordance with the provision of Act I for 1873 on 02-02-2026

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜான் வெஸ்லி | Village | : |
| Father's / Husband's Name | : வேதநாயகம் | Calling | : |
| Age | : | Taluk | : |

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.)

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :- இல்லை**

**1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

1 ஆம் பிரதிவாதி கிரிஸ்டிபெல் என்னுடைய சகோதரி. என்னிடம் காட்டப்படுவது நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலம் தானே என்றபொழுது சாட்சி அதனை படித்து பார்த்துவிட்டு இதில் என்ன உள்ளது என்று 1 ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரிடம் கேட்டுவிட்டு பின்பு ஆமாம் என்கின்றார். இதில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருக்கின்ற சங்கதிகள் நான் தாக்கல் செய்த பதிலுரை மற்றும் கூடுதல் பதிலுரையில் கண்டுள்ள சங்கதிகளுக்கு முரண்பாடாக இருக்கின்றது என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் எனக்கு இது சரியாக தெரியவில்லை. இந்த வழக்கு சொத்திற்கு நானும் என்னுடைய சகோதரி கிரிஸ்டிபெல்லும் தான் முழுமையான உரிமைதாரர்கள் என்றால் சரிதான். தற்பொழுதும் நாங்கள் இரண்டுபேரும் தான் உரிமையாளர்கள் என்றால் என்னுடைய அக்கா எனக்கு எழுதிக் கொடுத்துவிட்டார்கள். எனக்கு எழுதிக்கொடுத்ததை ரத்தும் செய்துவிட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதனால் தான் தாவா சொத்திற்கு நான் மட்டும் உரிமையாளர் என்று சொல்கின்றேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்திருக்கின்ற பிரமாண வாக்குமூலம் பக்கம் 3 ல் 4 ஆம் பிரதிவாதி என்னையும் என்னுடைய அக்காவையும் மிரட்டி ஆந்திர மாநிலத்திற்கு கடத்தி சென்று விடுதலை பத்திரம் மற்றும் வெற்றுக்காகிதங்களில் கையெழுத்து

வாங்கிக்கொண்டார் என்று சொல்லியிருக்கின்றேன் என்றால் சரிதான். என்னுடைய அக்காவை மிரட்டி தான் இந்த விடுதலை பத்திரம் என்னுடைய பெயருக்கு எழுதப்பட்டது என்றால் சரியல்ல. அப்படியென்றால் நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருக்கின்ற சங்கதிகள் தவறு என்றால் அப்படி மிரட்டி எதுவும் வாங்கவில்லை. என்னுடைய அக்கா கிரிஸ்டிபெல் எனக்கு எழுதிக்கொடுத்த விடுதலை பத்திரத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்திருக்கின்றேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடைய அக்கா கிரிஸ்டிபெல் எனக்கு விடுதலை பத்திரம் எழுதி கொடுத்தபொழுது அதற்கு பிரதிஉபகாரமாக பணம் எதுவும் கொடுத்தேனா என்றால என்னுடைய அக்காவிற்கு மருத்துவசெலவு மட்டும் செய்தேன். பணம் எதுவும் கொடுக்கவில்லை. என்னுடைய அக்காவிற்கு மருத்து செலவு செய்ததினால் அதற்கு பிரதிஉபகாரமாக விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்று நான் தாக்கல் செய்திருக்கின்ற பதிலுரை, கூடுதல் பதிலுரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியிருக்கின்றேனா என்பது எனக்கு ஞாபகம் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் பத்தி4 ல் சொல்லப்பட்டிருக்கின்ற என்னிடம் வாசித்து காட்டப்படுகின்ற சங்கதிகள் நான் தாக்கல் செய்திருக்கின்ற பதிலுரை, கூடுதல் பதிலுரையில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கின்றேன். அந்த பதிலுரையிலும் கூடுதல் பதிலுரையிலும் எந்த பகுதியில் இந்த சங்கதியை சொல்லியிருக்கின்றேன் என்பது எனக்கு ஞாபகம் இல்லை. நான் தாக்கல் செய்த பதிலுரை, கூடுதல் பதிலுரையிலும் நான் தற்போது சொல்லுகின்ற இந்த விவரங்கள் காணப்படவில்லை என்று சொன்னால் நான் அவரிடம் தமிழில் சொன்னேன் அவர் இங்கிலிசில் டைப் செய்து கொண்டார். வாதியுடன் நான் எந்த ஒப்பந்தமும் மேற்கொள்ளவில்லை என்று என்னுடைய பதிலுரையில் கூறியிருக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் என்னுடைய பதிலுரையிலும் கூடுதல் பதிலுரையிலும் சொல்லாத விஷயங்களை கூறியிருக்கின்றேன் என்றால் என்ன என்று சொன்னால் தானே எனக்கு தெரியும். இது பற்றி எனக்கு கவனம் இல்லை. என்னுடைய பதிலுரை, கூடுதல் பதிலுரையில் என்ன சங்கதிகளை சொல்லியிருக்கின்றேன் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் நாட்கள் அதிகமானதால் எனக்கு அது மறந்துவிட்டது. என்னை ஆந்திராவிற்கு கடத்திவிட்டதாகவும் அங்கு மிரட்டி கையெழுத்து வாங்கியதாகவும் சொல்லியிருப்பதை என்னுடைய பதிலுரையிலும், கூடுதல் பதிலுரையிலும் சொல்லியிருக்கிறேன். நான் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை என்றாலும்

வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தினை நில ஆர்ஜிதம் செய்வது தொடர்பாக அரசாங்கத்தில் இருந்து எனக்கு அறிவிப்பு எதுவும் வந்ததா என்றால் நான் அதனை கவனிக்கவில்லை. அவ்வாறு அறிவிப்பு வந்ததாக ஆவணம் எதனையும் நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு அது ஞாபகம் இல்லை. தாவா சொத்து சம்பந்தமாக பிலாலுக்கு 2010 ஆம் ஆண்டு பவர் கொடுத்தேன். பிலாலுக்கு பவர் கொடுத்தபொழுது என்னுடைய அசல் ஆவணங்கள் இல்லை என்று சொல்லி அதற்கான சான்றிட்ட நகலை பெற்று சொத்தை விற்றுத் தரவேண்டும் என்று தான் பவர் கொடுத்திருந்தேன் என்றால் ஆமாம். 09.01.2011 அன்று மக்கள் குரல் பத்திரிக்கையில் என்னுடைய வழக்கறிஞர் தாவா சொத்தின் அசல் ஆவணங்கள் தொலைந்துவிட்டது என்று அறிவிப்பு கொடுத்தார் என்றால் அந்த விளம்பரத்தை பிலால் தான் கொடுத்தார். நான் இந்த பத்திரிக்கையை எனது தரப்பு ஆவணமாக எனது பதிலுரையோடு தாக்கல் செய்திருக்கிறேன் ஆனால் அதனை எனது தரப்பு ஆவணமாக குறியீடு செய்யவில்லை என்றால் சரிதான். நான் வாதி மீது 19.05.2011, 28.05.2011 மற்றும் 23.08.2011 ல் அவர் என்னை மோசடி செய்தார் என்றும் அவர்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கொடுத்த புகாரை பதிலுரையோடு தாக்கல் செய்திருந்தும் ஏன் அந்த புகாரை குறியீடு செய்யவில்லை என்றால் 4 ஆம் பிரதிவாதி துரைராஜ் தான் வக்கீல் வைத்தார். அந்த வக்கீல் யாரென்று தெரியாது. சங்கதியும் தெரியாது. நான் தாக்கல் செய்த கூடுதல் எதிர்வழக்குரையில் நான் கொடுத்ததாக சொல்லும் போலிஸ் புகார்களை பற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கின்ற கூடுதல் பதிலுரை பத்தி 2 ல் 2 ஆம் பிரதிவாதி ஏற்கனவே விரிவான பதிலுரை தாக்கல் செய்திருப்பதாகவும் அந்த பதிலுரையை தற்பொழுது தாக்கல் செய்யும் கூடுதல் பதிலுரையின் ஒரு பகுதியாக பாவிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு இது பற்றி கவனம் இல்லை. 2 ஆம் பிரதிவாதி அவரது பதிலுரையில் சொல்லியிருக்கின்ற சங்கதிகளை நான் ஏற்றுக்கொள்வதாக கூறியிருக்கின்றேன் என்றால் எனக்கு அது ஞாபகம் இல்லை. நான் என்னுடைய பதிலுரை கூடுதல் பதிலுரை ஆகியவற்றில் சொல்லாத விசயங்களை என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சாட்சியமாக தாக்கல் செய்திருப்பது ஏற்றுக்கொள்ளப்படமுடியாதது என்றால் சரியல்ல. நான் தற்பொழுது வாதியோடு சேர்ந்துகொண்டு 4 ஆம் பிரதிவாதியை ஏமாற்றுவதற்கு பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. இந்த சொத்திற்கு 1 ஆம்

பிரதிவாதி கிரிஸ்டிபெல்லும் கூட்டு உரிமையாளர் என்றால் சரியல்ல. பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(3, 4 மற்றும் 5ஆம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).